திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்திடமிருந்து கரூர், பொள்ளாச்சி, தஞ்சாவூர், கோவை, மதுரை ஆகிய 5 நகராட்சிகள் தான் மின்சாரத்தை அவர்களே உபயோகப்பாளர்களுக்கு தருகிறார்கள். அதனால் மின்வாரிய கட்டணங்களைவிட, அங்கே கட்டணம் இரு மடங்காக இருக்கிறது. அதனால் உபயோகிப்பாளர்கள் பல தடவை அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் விடுத்து இருக்கிறார்கள். ஆகவே, இதை கும்பகோணம் நகராட்சியில் இருப்பதைப் போல ஒரு கோவாபரேடிவ் சிஸ்டம் மூலமாக இந்த மின் விநியோகத்தை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 2 மாநகராட்சிகள் மற்றும் 3 நகராட்சிப் பகுதிகளில் மின்சார விநியோகம் செய்யும் பொறுப்பை மின்வாரியத்திடம் ஒப்படைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் தயாராக இருக்கிறது. ஆனால். மின் வாரியம் கொடுக்கவேண்டிய நஷ்டஈடு சுமார் 40 கோடி முதல் 50 கோடி ரூபாய் வரலாம் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது, இந்த 50 கோடியை யார் பொறுப்பேற்றுக்கொள்வது என்ற பிரச்சினை தான். இரண்டு துறைகளின் சார்பாக அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகிறார்கள், அது பற்றி விரைவில் முடிவு எடுத்து 2 மாநகராட்சிகள் மற்றும் 3 நகராட்சிகளில் இருக்கிற மின்சார விநியோகத்தை மின்சார வாரியத்திடம் ஒப்படைப்பதற்கு விரைவாக முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 640, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

640 —

கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

*5305 திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர், துவாக்குடி, கூத்தைப்பார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவெறும்பூர், துவாக்குடி கூத்தைப்பார் ஆகிய பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ, 525.60 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்பக் குழு வாரியத்தின் ஒப்புதலுடன் நிர்வாக ஒப்புதலுக்காக, வாரியத்தால் அரசுக்கு அனுப்பப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பேரூராட்சிகளின் தீர்மானங்கள் மற்றும் நிதிச் சான்றுகளுடன் அரசுக்கு மீண்டும் திட்ட செயற் குறிப்பினை அனுப்பி வைக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. திருவெறும்பூர். துவாக்குடி. கூத்தைப்பார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி, காவிரி கரையில் வசித்தும் காவிரி தண்ணீரைக் குடிநீராகப் பெற முடியாமல் தவிக்கிற அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்டு இந்தத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நடப்பு நிதியாண்டில் நிதியொதுக்கி திட்ட பணிகள் தொடங்குவதற்கு அரசு ஆவண செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு பிறகு பணிகள் மேற்கொள்ளப்படும் இந்த ஆண்டிலே பணிகள் தொடங்குவதற்கான ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 641 திரு. பே. தர்மலிங்கம். இருக்கையில் இல்லை,

வினா எண் 642, டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

642—

Allottment of Government Rental Accomodation to Widows on priority basis.

*4366 DR. BEATRIX D' SOUZA :

Will the Hon. the Minister for Housing and Urban Development be pleased to state—

Whether Government will consider allocation of Government rental accommodation to single mothers, divorcees and widows on priority basis?